கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

ஆடி மாத இதழ்
NEWS BULLETIN
JULY 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
2002 முதல் 22 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA முகவரியில் நடைபெற்று வருகின்றது
07/09/ 2024	தமிழ்ப் பாடசாலை மீண்டும் புதிய கல்வியாண்டுக்காக ஆரம்பமாகும்.
07/09/ 2024	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் புதிய நிர்வாக உறுப்பினர் நியமனப் பத்திரம் கையளித்தல்
21/09/ 2024	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம்

SATURDAY	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Tamil	10.00am – 12.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D)	10.00am – 12.00am





கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் விளையாட்டு விழா

இந்த வருடத்துக்கான கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டு விழா 13/07/2024 அன்று Lyng Hall பாடசாலை மைதானத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. சேரன், சோழன், பாண்டியன் என இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றமை எல்லோருக்கும் உற்சாகத்தை அளித்தது.

விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினர்களாக FORMER LORD MAYOR OF COVENTRY, COUNCILLOR JASWANT SINGH BIRDI அவர்களும், அவரது துணைவியார் FORMER LORD MAYORESS MRS KRISHNA BIRDI அவர்களும் வருகை தந்திருந்தார்கள். COUNCILLOR பிரித்தானிய தேசியக் கொடியை ஏற்றியதோடு, சிறப்புரையும் ஆற்றி, விளையாட்டு விழாவைச் சிறப்பித்திருந்தார்.





சிறப்பு விருந்தினராக முன்னாள் வெண்புறா பொறுப்பாளரும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினருமான திரு அல்பிரட் அந்தோனிப்பிள்ளை (வீரன்) அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு, தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி வைத்து, வாழ்த்துரையும் வழங்கினார்.





அதனைத் தொடர்ந்து, மாணவர்களின் அணிவகுப்பு இடம்பெற்று, ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது. வரவேற்புரையினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் விளையாட்டு இணைப்பாளர் திருமதி விஜிதா ரவீந்திரன் அவர்கள் வழங்கினார்.







தலைமையுரையினை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்கள் நிகழ்த்தியதோடு கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் கொடியையும் ஏற்றிவைத்தார்.





அதன் பின்னர் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு, உற்சாகமாக நடைபெற்றன.



இல்லங்களின் அடிப்படையில், மாணவர்களுக்கு இடையிலான போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றதோடு, பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளும் உற்சாகமான முறையில் நடைபெற்றன.







விநோத உடைப் போட்டியிலும் மாணவர்கள் மிகவும் உற்சாகத்தோடு கலந்து கொண்டதோடு, நடுவர்களின் கேள்விகளுக்கு அனைத்து மாணவர்களும் சாதுரியமாகப் பதிலளித்திருந்தார்கள்.





வெற்றி பெற்ற மாணவர்களின் புள்ளிகளின் அடிப்படையில், மூன்றாம் இடத்தினை சோழன்(பச்சை) இல்லமும், இரண்டாம் இடத்தினை சேரன்(சிவப்பு) இல்லமும், கடந்த வருடத்தைப்போல் முதலாம் இடத்தினை பாண்டியன்(நீலம்) இல்லமும் பெற்றுக் கொண்டன. இதற்காக, அர்ப்பணிப்போடு செயற்பட்ட அனைவருக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.



கயிறிழுத்தல் போட்டியில் பெண்கள் அணிகள், மற்றும் ஆண்கள் அணியோடு போட்டியிட்டு வெற்றியீட்டிய பெண்கள் அணியினர்.



வருடாந்த விளையாட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற பல நல்ல உள்ளங்கள் அனுசரணை வழங்கியிருந்தார்கள். தாயக உணவுகளைத் தயாரித்துத் தந்தும், அவற்றை விற்பனை செய்தும் ஆதரவு நல்கிய அனைவருக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.









மேலும் ஐஸ்கிரீம் வான், மணிக்கடைகள், கச்சான் கடை, என எமது ஊரில் நடைபெற்ற உணர்வினை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. விளையாட்டு விழாவின் காணொளியினை "RAJAH VIEWS" YOUTUBE வலைத்தளத்திலும், புகைப்படங்களை SILENT SHUTTER PHOTOGRAPH இன் முகநூல் பக்கத்திலும் பார்வையிடலாம்.



தேரேறிய அம்மன் திருவடியில் காவடி

கொவன்றி சிவ முத்துமாரி அம்மன் தேர்த் திருவிழா 07/07/2024 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான '**நுண்கலைமாணி**', '**நாட்டிய கலாநிபுணா**' ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்வி ஆரதி சியாமளன், செல்வி வைசாலி காண்டீபன், செல்வி ரிதன்யா மோகன், செல்வி இதயனி இதயகுமார் ஆகியோர் காவடி கிராமிய நடனத்தை வழங்கியிருந்தனர்.



கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கமானது தமிழ் மக்களுக்கு உதவும் நோக்கோடு, 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, ஒரு அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளையாக இங்கிலாந்திலும், வேல்சிலும் பதிவுஎண் 1093924 ன் கீழ்ப்பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் எதிர் நோக்கும் நடைமுறைப் பிரச்சனைகளுக்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அறக்கட்டளையானது, பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றது.

வளர்ந்துவரும் இளஞ் சமுதாயத்தின் மத்தியில் எமது தாய்மொழி தமிழைக் கற்பிப்பதும், எமது பாரம்பரிய கலைகளை வளர்ப்பதையும் அனுபவமும் தகுதியும் மிக்க



ஆசிரியர்களால் வார இறுதி நாட்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல், இளம் கலைமானி மற்றும் முதுகலைமானி போன்ற பட்டப் படிப்புகளைத் தமிழில் மேற்கொள்வதற்கு தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாகவும் செயற்பட்டு வருகின்றது.

பிரித்தானிய பிரஜாவுரிமை, கடவுச்சீட்டு, வீசா, பாடசாலை அனுமதி, வங்கிக்கடன் போன்றவற்றுக்கு உரிய விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதோடு, அவற்றை உறுதிப்படுத்திக் கையொப்பங்களை இடும் சேவைகளையும், சட்ட ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றது.

ஈழத்துப் புலமைகள் (பாகம் 22)

கடந்த இதழிலே!

இற்றைக்கு இரு நூற்றி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்து மானிப்பாயில் வாழ்ந்த தமிழறிஞ்ரான சுவாமி நாதர் பற்றிப் பார்த்திருந்தோம்.

இவ்விதழிலே!!

சரவணமுத்து புலவர் அவர்களைப் பார்ப்போம்.
சவணமுத்து புலவர் இருபாலை சேனாதிராய முதலியாரிடம் இலக்கண இலக்கியங்களை முறையாக கற்றுத்தேர்ந்தவர்.ஆறுமுக நாவலர் உட்பட உடுப்பிட்டி சிவசம்பு புலவர்,சம்பந்த முதலியார்,கார்த்திகேய உபாத்தியாயர் போன்ற பல ஆளுமை மிக்க அறிஞர்களை உருவாக்கியவர்.

இவர் இற்றைக்கு 175 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் நல்லூரில் வாழ்ந்த மனப்புலி முதலியாரின் இரண்டாவது மகனாவார்.
கட்ந்த நூற்றாண்டின் மத்திய பகுதிவரை நீண்டகாலம் நிலைத்திருந்த "உதய தாரகை"என்ற பத்திரிகையில் பல விவாதங்களையும், இலக்கண,இலக்கிய ஆய்வுகளையும் எழுதி வெளியிட்டவர்.
" வேதாந்த சுயஞ்சோதி", " ஆத்தும போத பிரகாசிகை" போன்ற நூல்களை எழுதி வெளியிட்டவர்.
"நெல்லை வேலருலா"என்ற பிரபந்தத்தை பாடியவரும் இவரே.

திருமறைக்காடு எனப்படும் வேதாரணியேஸ்வரர் கோவிலைப்பற்றி பல ஈழத்து புலவர்களும் அறிஞர்களும் எஉதியும் பாடியும் உள்ளனர்.அதற்குள் சரனவண முத்துப் புலவரும் அடங்குவார்.
புலவர் அவ்ர்கள் வேதாரணியம்தர்மலிங்கேஸ்வரர் மீது பாடிய தனிக் கவிதை ஒன்றினைக் காண்போம்.

ஆசிரிய விருத்தம்

" சுத்தி பெற லாம்புத்தி முத்தி பெற லாம்பவுத்திர
சுக புத்தி ராதி பெறலாம்
தொலையாத குமன்ம சய ரோகமுத நோய்களொரு
சொல்லிலே சுத்தி பெறலாம்
பத்தி பெறலாங் குருடு கூன் செவிடு சப்பாணி
பரிசுத்த மாகை பெறலாம்
பயமேறு பூதம் பிரேத பசாசுகள்
பறந்தோட வெற்றி பெற்லாம்
சித்தி பெற லாஞ்சுத்த வித்தை பெற லாஞ்செய
சிற் சொருப மகிமை பெறலாம்
சிவயோக மாதி பல வகை யோக சாதனச்
சிவயோக திர்ப்தி பெறலாம்
சத்திபெற லாஞ்சைவ தர்மலிங்க சாமி
ச ந் நிதியடைந்து பணிமின்
சற்சங்க சகலசன சமயபரிபாலர்காள்
சத்தியஞ் சத்தியமிதே"

(அடுத்த இத்ழில் தொடரும்)

ஆக்கம்
திரு தவத்துரை மாணிக்கம் ஆசிரியர்